தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

## 11.10.2013

**விதை நெல் கிடைக்காமல் விவசாயிகள் கவலைதி.ராமகிருஷ்ணன்**

அகஸ்தீசுவரம் வட்டாரப் பகுதிகளில் போதுமான விதை நெல் கிடைக்காததால் விளை நிலங்களில் பயிர் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் பருவ மழை சரிவர பெய்யாததால் கடந்த ஆண்டு விவசாயிகள் நெல்பயிர் செய்ய முடியாத நிலை இருந்து வந்தது. இதனால் மாவட்டத்தில் விவசாயம் தடைபட்டது. இந்நிலையில் கடந்த இரு மாதங்களாக அணையின் நீர்பிடிப்பு பகுதிகளிலும், மலைப் பகுதிகளிலும் தொடர்ந்து சாரல் மழை பெய்து வந்த நிலையில் பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகளில் நீர்மட்டம் அதிகரித்தது.

கடந்த ஜூன் மாதத்தில் ஈத்தன்காடு, மயிலாடி, அச்சன்குளம், அஞ்சுகிராமம், தேரூர், குலசேகரபுரம் உள்ளிட்ட பகுதிகளில் கன்னிப்பூ பருவம் செய்த விவசாயிகள் தற்போது அறுவடை செய்ய தயாராக உள்ளனர். குளங்களில் விவசாயம் செய்ய போதுமான அளவுக்கு தண்ணீர் உள்ளதால் கும்பப்பூ பருவத்துக்கு விவசாயிகள் தயாராகி வருகின்றனர்.

கடந்த ஆண்டுகளில் மழையின்றி பயிர் செய்யப்படாததால் விவசாயிகளிடம் நெல் கையிருப்பு இல்லாத நிலை உள்ளது. இதனால் குறிப்பிட்ட ரகங்களுக்கான விதைநெல் கிடைப்பதில் பிரச்னை இருந்து வருவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். அகஸ்தீசுவரம் வட்டாரத்தில் டி.பி.எஸ். 3, அம்பை 16, ஆடுதுறை 37, பொன்மணி, திருப்பதிசாரம் 1,2,3, சாவித்ரி உள்ளிட்ட நெல் ரகங்கள் அதிகமாக பயிர் செய்யப்பட்டு வருகிறது. இதில் ஆடுதுறை 37 ரகம் 100

நாள்களிலும், அம்பை 16 ரகம் 115 நாள்களிலும், டி.பி.எஸ். 3 ரகம் 130 நாள்களிலும் அறுவடைக்கு தயாராகின்றன.

இது குறித்து லீபுரத்தைச் சேர்ந்த விவசாயி கோவி விநாஸ் குமார் (38) கூறியதாவது: கடந்த ஆண்டு இருபோகம் விளைச்சல் இல்லாத நிலையில் மழை கண்டிப்பாக வரும் என்ற நம்பிக்கையில் ஜூன் மாத இறுதியில் கன்னிப்பூ பருவம் செய்தோம். கடைசி நேரத்தில் சாரல் மழை கைகொடுத்ததால் தற்போது பயிர்கள் அறுவடைக்கு தயாராக உள்ளது. இந்நிலையில் தற்போது நீர்நிலைகளில் தண்ணீர் தேவையான அளவு உள்ளதால் கும்பப்பூ பருவத்துக்கு தயாராகி வருகிறோம்.

வேளாண் விற்பனை நிலையங்களில் அம்பை 16, திருப்பதிசாரம் 1,2,3, பொன்மணி உள்ளிட்ட ரகங்களுக்கான விதைநெல் கிடைக்காத நிலை உள்ளது. ஒரு ஏக்கருக்கு 35 முதல் 40 கிலோ வரை விதை நெல் தேவை உள்ளது. வேளாண் அலுவலகங்களில் கிலோ ரூ. 27-க்கு கிடைக்கும். அங்கு விதைநெல் தட்டுப்பாடு உள்ளதால் வெளிச் சந்தையில் வாங்க வேண்டியுள்ளது. திருநெல்வேலி மாவட்டம் பழவூர், கருங்குளம் உள்ளிட்ட வெளிச் சந்தையில் கிலோ ரூ. 39 முதல் ரூ. 42 வரை விதை நெல் விற்பனை செய்யப்படுகிறது. பருவம் செய்ய ஏற்ற தருணம் இது என்பதால் அதிக விலை கொடுத்தாவது விதை நெல் வாங்க வேண்டியுள்ளது. மேலும் விவசாயிகளுக்குத் தேவையான அனைத்து விதைநெல் ரகங்களையும் வேளாண் நிலையங்களில் விற்பனை செய்ய அரசு முன்வர வேண்டும் என்றார் அவர்.

இது குறித்து அகஸ்தீசுவரம் வட்டார வேளாண் உதவி இயக்குநர் ம.முருகேசன் கூறியதாவது:

அகஸ்தீசுவரம் வட்டாரத்தைப் பொருத்தவரை கடந்த 10 ஆண்டுகளாக 2000 முதல் 2500 ஹெக்டேர் நிலங்களில் நெல் பயிரிடப்பட்டு வருகிறது. இதன் மூலம் 20 மெட்ரிக் டன் நெல் விளைச்சலாகிறது.

வட்டாரத்தில் கன்னியாகுமரியை அடுத்த பெருமாள்புரம், வழுக்கன்பாறை, இரவிபுதூர், தேரூர் உள்ளிட்ட 4 பகுதிகளில் உள்ள வேளாண் அலுவலகங்கள் மூலம் விவசாயிகளுக்கு விதை நெல் வழங்கப்பட்டு வருகிறது. நிகழாண்டு கும்பப்பூ பருவத்துக்காக டி.பி.எஸ். 3 ரகம் 24 டன், சாவித்ரி ரகம் 1 டன் விதை நெல்

வழங்கப்பட்டுள்ளது. இது விவசாயிகளின் தேவைக்கு போதுமானது என்றார் அவர்.

**விளாகம் கிராமத்தில் இன்று விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

பாளையங்கோட்டை வட்டம், விளாகம் கிராமத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் வெள்ளிக்கிழமை (அக்.11) நடைபெறுகிறது.

இதுதொடர்பாக திருநெல்வேலி கோட்டாட்சியர் க. சீனிவாசன் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

விளாகம் கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளியில் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு திருநெல்வேலி கோட்டத்துக்கு உள்பட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம், எனது தலைமையில் நடைபெறுகிறது. திருநெல்வேலி, பாளையங்கோட்டை, சங்கரன்கோவில் வட்டத்துக்கு உள்பட்ட விவசாயிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள், நீர்ப்பாசன சங்கத் தலைவர்கள் பங்கேற்கலாம் என்றார் அவர்.

**வரத்துக்குறைவால் பூக்களின் விலை உயர்வு**

வரத்துக்குறைவால் கரூர் மாவட்டத்தில் பூக்களின் விலை 3 மடங்கு உயர்ந்துள்ளது.

கரூர் மாவட்டத்தில் லந்தகோட்டை, மாயனூர், ராயனூர், குஜிலியம்பாறை, செட்டிப்பாளையம், தோகைமலை உள்ளிட்ட பகுதிகளில் மல்லிகை, முல்லை, பிச்சி, செவ்வந்தி, அரளி, சம்பங்கி, கோழிக்கொண்டை ஆகிய பூக்கள் சுமார் 300 எக்டேரில் பயிரிடப்படுகின்றன. தற்போது இப்பகுதிகளில் பெய்த தென்மேற்கு பருவமழையால் விளைச்சல் பாதிக்கப்பட்டது. இதனால் கரூர் சந்தைக்கு பூக்களின் வரத்து குறைந்ததால் அவற்றின் விலை மூன்று மடங்கு உயர்ந்துள்ளது.

இதுகுறித்து கரூரை சேர்ந்த பூ வியாபாரி கூறுகையில், தற்போது பூக்கள் சீசன் முடியும் தருவாயில் உள்ளது. ஜீலை மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரை பூக்கள் உற்பத்தி அதிகமாக இருக்கும். அந்த நேரங்களில் மல்லிகை கிலோ ஒன்றுக்கு ரூ.400 முதல் 500 வரை விற்றது. முல்லை ரூ. 400, பிச்சிப்பூ ரூ. 300, செவ்வந்தி ரூ.

150, அரளி ரூ. 130, சம்பங்கி ரூ. 140. கோழிக்கொண்டை ரூ. 100 என விற்றது. ஆனால் தற்போது ஆயுத பூஜை, சரஸ்வதி பூஜை மற்றும் திருமண முகூர்த்தங்கள் உள்ளிட்ட பண்டிகை காலம் என்பதால் பூக்களின் தேவை அதிகரித்துள்ளது. எனவே வியாபாரிகள், இப்பவே பூக்களை அதிகளவில் வாங்கி சேமிக்கத்தொடங்கி விட்டனர். மேலும் தற்போது பெய்த மழையாலும் விளைச்சல் பாதிக்கப்பட்டதால் அவற்றின் வரத்து பாதியாக குறைந்துள்ளது. இதனால் வியாழக்கிழமை (அக்.10) மல்லி கிலோ ஒன்றுக்கு ரூ. 1000-ம், முல்லை ரூ. 700, பிச்சிப்பூ ரூ. 600, செவ்வந்தி ரூ. 300, அரளி ரூ. 300, சம்பங்கி ரூ. 600, கோழிக்கொண்டை ரூ. 150-க்கும் விற்பனையானது. மேலும், நவம்பர், டிசம்பர் மாதங்களில் மல்லிகைப்பூவின் விலை கிலோ ரூ. 2,000 கூட உயரலாம் என்றார்.

**பயிர்களின் நோய் தீர்க்கும் "பயிர் மருத்துவர்கள்'**

மனிதனுக்கு ஏற்படும் நோய்க்கு மருத்துவர்கள் சிகிச்சை அளிப்பது போல பயிர்களைத் தாக்கும் நோய்களைக் கண்டறிந்து அவற்றைத் தடுப்பதற்கான ஆலோசனைகளை வழங்கி, மருந்துகளையும் பரிந்துரை செய்து வருகின்றனர் பயிர் மருத்துவர்கள்.

எம்.எஸ். சுவாமிநாதன் ஆய்வு நிறுவனம், காபி நிறுவனம் இணைந்து இந்தப் பணியை மேற்கொண்டு வருகின்றன. இதில் திருவையாறு பகுதியில் எம்.எஸ். சுவாமிநாதன் ஆய்வு நிறுவனத்தின் கிராமவள மையம் சார்பில் விளாங்குடி, ராஜேந்திரம், பசுபதிகோவில், கீழப்புனல்வாசல், வரகூர், நெடுவாசல் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த ஏறத்தாழ 30 விவசாயிகளுக்குப் பயிர் மருத்துவப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

பயிர்களில் நோய், பூச்சித் தாக்குதலைக் கண்டறியவும், அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான மருந்துகளைப் பரிந்துரை செய்யும் வகையிலும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இந்தப் பயிற்சி பெற்றவர்கள் பயிர் மருத்துவர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து எம்.எஸ். சுவாமிநாதன் ஆய்வு நிறுவன ஆலோசகர் வ. பழனியப்பன் தெரிவித்தது:

விவசாய சாகுபடிப் பரப்பளவு அதிகமாக இருப்பதாலும், பணிப் பளு காரணமாகவும், வேளாண் துறையினரால் முழுமையாகச் சென்று பார்வையிட இயலவில்லை. ஆனால், ஆலோசனைகள் வழங்குவதற்கான ஆள்கள் இல்லாததால், விவசாயிகள் மிகுந்த சிரமங்களுக்கு ஆளாகின்றனர். இதுபோன்ற பிரச்னையை தவிர்ப்பதற்காக விவசாயிகளில் எழுத, படிக்கத் தெரிந்தவர்களைத் தேர்ந்தெடுத்து இப்பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் விவசாயிகள் பயனடைந்து வருகின்றனர் என்றார் பழனியப்பன்.

இந்தப் பயிர் மருத்துவர்கள் மாதத்துக்கு ஒரு கிராமம் வீதம் சென்று அங்கு இரு முறை முகாம்கள் நடத்துகின்றனர். இதில் பாதிப்புக்குள்ளான நெல், கரும்பு, வாழை, தென்னை, வெற்றிலை, காய்கறிகள், பழம், மலர் என எந்த வகைப் பயிர்களாக இருந்தாலும், நோய், பூச்சி தாக்குதலைக் கண்டறிந்து, அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான மருந்துகளையும் பரிந்துரை செய்கின்றனர்.

இதுபோல, தஞ்சாவூர் அருகேயுள்ள ராஜேந்திரம் கிராமத்தில் வியாழக்கிழமை பயிர் மருத்துவ முகாம் நடைபெற்றது. இதில், விவசாயிகள் நோய் தாக்குதலுக்குள்ளான நெல் பயிர்களைக் கொண்டு வந்தனர். அவற்றை ஆய்வு செய்த பயிர் மருத்துவர்கள் மருந்துகளையும் பரிந்துரைத்தனர்.

இதுகுறித்து பயிர் மருத்துவர்கள் சாரங்கபாணி, ஸ்ரீதர் தெரிவித்தது:

முகாமில் விவசாயிகள் கொண்டு வரும் பாதிப்புக்குள்ளான பயிர்களை முதலில் பார்வையிட்டு, எந்த வகையான நோய் அல்லது பூச்சியால் தாக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிவோம். பின்னர், நோய், பூச்சிகளைக் கட்டுப்படுத்தக்கூடிய மருந்துகளைப் பரிந்துரைப்போம். எங்களால் கண்டுபிடிக்க முடியாவிட்டால் வேளாண் வல்லுநர்களுக்குப் பயிரை அனுப்பி, ஆலோசனைகளைப் பெற்று விவசாயிகளுக்குத் தெரிவிப்போம் என்றனர்.

இந்த முகாமை இங்கிலாந்தை சேர்ந்த காபி நிறுவனத்தைச் சேர்ந்த வல்லுநர்கள் டிம், ஷான் ஹோப்ஸ், தில்லியைச் சேர்ந்த மஞ்சு தாகூர், மாளவிகா உள்ளிட்டோர் பார்வையிட்டனர்.

பயிர் மருத்துவர்களால் அறிய முடியாத பாதிப்பு குறித்து கையடக்கக் கணினி சாதனம் மூலம் உடனடியாக ஆலோசனை வழங்குவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆய்வு செய்தனர். இந்தத் திட்டம் 2014 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்றார் ஷான் ஹோரப்ஸ்.

**கிருஷ்ணகிரியில் விவசாயிகள் ஆர்ப்பாட்டம்**

பால் கொள்முதல் விலையை உயர்த்தித் தரக் கோரி, கிருஷ்ணகிரி விவசாயிகள் வியாழக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் சார்பில், கிருஷ்ணகிரி "ஆவின்' தொழில்சாலை முன் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு சங்க மாநில பொதுச் செயலர் கே.எம்.ராமக்கவுண்டர் தலைமை வகித்தார்.

ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற மாநிலத் தலைவர் எம்.ஆர்.சிவசாமி பேசியது: கிருஷ்ணகிரி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்திற்கு ஏற்பட்டுள்ள ரூ.100 கோடி இழப்பீட்டுத் தொகையை உடனடியாக வழங்கிட இணையம் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆந்திரம், கர்நாடகம், கேரளம் ஆகிய மாநிலங்களில் உள்ளது போல பால் லிட்டருக்கு ரூ.6 உற்பத்தி மானியம் வழங்கி, 10 ரூபாய் கொள்முதல் விலையை உயர்த்தித் தர வேண்டும். கறவை மாடுகளுக்கு 75 சத மானியத்தில் தீவனம் வழங்கி, நிலுவையிலுள்ள தொகையைத் தாமதமின்றி உடனே வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும், மூடப்பட்ட அனைத்துப் பால் கொள்முதல் சங்கங்களை திறந்து வேலை இழந்த பணியாளர்களுக்கு மீண்டும் வேலை வழங்க  வேண்டும். அதேபோல, பால் உற்பத்தியாளர்களுக்கு தீபாவளி ஊக்கத்தொகை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். கால்நடைகளுக்கு இலவசக் காப்பீட்டுத் திட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்றார் அவர்.

முன்னதாக, விவசாயிகள் தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தி, கிருஷ்ணகிரி ரவுண்டா

னாவிலிருந்து பேரணியாகப் புறப்பட்டு "ஆவின்' தொழில்சாலை வந்தடைந்தனர். தொடர்ந்து கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பப்பட்டன.

இதில், சங்கத்தின் வேலூர் மாவட்டத் தலைவர் லோகநாதன், மாவட்டத் துணைத் தலைவர் ஹரிகுமார், மாவட்டப் பொருளாளர் அசோக்குமார், ஒருங்கிணைந்த மாவட்டப் பொதுச் செயலர் டி.பி.சுந்தரேசன், மகளிரணித் தலைவர் கே.பெருமா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**வேலூர் மாவட்டத்தில் பரவலாக மழை**

வேலூர் மாவட்டத்தில் புதன்கிழமை மாலை தொடங்கி பரவலாக நல்ல மழை பெய்தது. வேலூரில் நகரில் சுமார் 30 நிமிடம் பலத்த மழை பெய்தது. இதனால் நகரில் பெரும்பாலான இடங்களில் தண்ணீர் தேங்கத் தொடங்கியது.

புதிய பஸ் நிலையம், கிரீன் சர்க்கிள், பழைய பஸ் நிலையம், ஆபிஸர்ஸ் லைன், தொரப்பாடி உள்ளிட்ட இடங்களில் மழையை அடுத்து, சிறிதுநேரம் போக்குவரத்து சீர்குலைவு ஏற்பட்டது.

மாவட்டத்தில் புதன்கிழமை காலை 8 மணி வரையிலான கடந்த 24 மணி நேரத்தில் அதிக அளவாக ஆம்பூரில் 17.2 மி.மீட்டர் மழை பதிவானது. பிற இடங்களில் பெய்த மழை (மி.மீட்டரில்):

குடியாத்தம் 4.1, திருப்பத்தூர் 7, வாணியம்பாடி 11, ஆலங்காயம் 16.6, மேல்ஆலத்தூர் 3.8.

குடியாத்தம்

குடியாத்தம் மற்றும் அதன் சுற்றுப் பகுதியில் புதன்கிழமை மாலை பலத்த மழை பெய்தது.

இப்பகுதியில் மதியம் முதல் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. மாலை 6 மணிக்குத் தொடங்கி சுமார் 1 மணி நேரம் மழை பெய்தது.

அப்போது சூறாவளிக்காற்று வீசியதால் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. மழை நின்றதும், மின் விநியோகம் சீரானது.

**நாட்டுக்கோழி வளர்ப்பு பயிற்சி முகாம்**

தமிழ்நாடு கால்நடை பல்கலை. பயிற்சி மையம் சார்பில், ஈரோட்டில் நாட்டுக்கோழி வளர்ப்பு பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

இதுகுறித்து, இப்பல்கலைக்கழக ஈரோடு பயிற்சி மற்றும் ஆராய்சி மையத் தலைவர் இரா.யசோதை செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்தி:

வளர்ந்து வரும் இந்தியப் பொருளாதாரத்தில் கால்நடை உற்பத்திப் பொருள்களான பால், முட்டை மற்றும் இறைச்சி பங்களிப்பு அதிகரித்து வருகிறது. இதற்கான தொழில்நுட்ப முறைகளை கால்நடை, கோழி மற்றும் மீன் பண்ணைத் தொழிலில் மேற்கொள்ள வேண்டும்.

கால்நடை, கோழி மற்றும் மீன் பண்ணைகளின் பராமரிப்பு மற்றும் பிற தொழில்நுட்பங்களை விவசாயிகள் அறியும் வகையில் செயல்திறன் மேம்பாட்டுப் பயிற்சியை நடத்த முடிவு செய்துள்ளது. இதன்கீழ் நாட்டுக்கோழி வளர்ப்பு பற்றி பயிற்சி விரைவில் அளிக்கப்படவுள்ளது.

தமிழில் எழுதப் படிக்கத் தெரிந்த 18 வயது பூர்த்தியடைந்தவர்கள் இப் பயிற்சியில் சேரலாம். பயிற்சிக் கட்டணமாக ரூ.1,000 செலுத்த வேண்டும். இப்பயிற்சி பெற விரும்புவோர் தலைவர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம், 306 சத்தி சாலை, வீரப்பன்சத்திரம், ஈரோடு என்ற முகவரியில் அணுகலாம். 0424-229 1482 என்ற தொலைபேசி எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம்.

மேலும், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் புதிதாக அறிமுகப்படுத்தியுள்ள 18 வகையான செயல்திறன் மேம்பாட்டு பயிற்சிகள் மற்றும் 14 வகையான சுய வேலைவாய்ப்பு பயிற்சிகள் பற்றிய விவரங்களைப் பெற விரும்புவோர் தொலை நிலைக் கல்வி இயக்குநர், தமிழ்நாடு கால்நடை மருத்துவ

அறிவியல் பல்கலைக்கழகம், மாதவரம் பால் பண்ணை வளாகம், சென்னை-51 என்ற முகவரியில் அறிந்து கொள்ளலாம். தொலைபேசி எண் 044-2555 4411.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 72.75 அடி**

பவானிசாகர் அணை நீர்மட்டம் வியாழக்கிழமை நிலவரப்படி 72.75 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 1,054 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 700 கனஅடி நீரும், வாய்க்காலில் 2,300 கனஅடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர் இருப்பு 12.15 டி.எம்.சி.

**சத்தியில் மழை நீர் சேகரிப்பு விழிப்புணர்வுப் பேரண**

சத்தியமங்கலத்தில் மழை நீர் சேகரிப்பு விழிப்புணர்வுப் பேரணி வியாழக்கிழமை நடைபெற்றது.

தென்மேற்குப் பருவமழை சரியாகப் பெய்யாததால் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து ஆழ்குழாய்க் கிணறுகளில் தண்ணீர் அதல பாதாளத்துக்குச் சென்றுவிட்டது. ஆழ்குழாய்க் கிணறுகளில் நீர்மட்டத்தைச் சீராக வைத்துக் கொள்ள மழை நீர் சேகரிப்புத் தொட்டி மிகவும் உதவியாக இருக்கும் என்பதையும், அதன் அவசியத்தை மக்களுக்கு உணர்த்துவதற்காகவும் சத்தியில் நகராட்சி சார்பில் மழை நீர் சேகரிப்பு விழிப்புணர்வுப் பேரணி வியாழக்கிழமை நடத்தப்பட்டது.

சத்தி எஸ்.ஆர்.டி. கார்னரில் இருந்து இப் பேரணியை மாவட்ட ஆட்சியர் வி.கே.சண்முகம் துவக்கி வைத்தார். மைசூர் டிரங் ரோடு, புதிய பாலம், கடைவீதி வழியாக பழைய மார்க்கெட்டைப் பேரணி சென்றடைந்தது. மாவட்ட ஊராட்சித் தலைவர் எஸ்.ஆர்.செல்வம், நகர்மன்றத் தலைவர் ஓ.எம்.சுப்பிரமணியம், நகராட்சி ஆணையாளர் கு.தனலட்சுமி, நகர்மன்ற துணைத் தலைவர் என்.திலகவதி நடராஜ், நகர்மன்ற உறுப்பினர்கள், பள்ளி மாணவ, மாணவிகள் மற்றும் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இதில் கலந்து கொண்டனர்.

**விவசாயிகளுக்கு  கடனுதவி வழங்கல்**

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி பேரூராட்சி தாதம்பட்டி சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா கிளை சார்பாக விவசாயிகளுக்கு ரூ. 15 லட்சம் கடனுதவி வழங்கும் விழா வியாழக்கிழமை நடைபெற்றது. விவசாயிகள் சந்திப்பு மற்றும் சிறப்பு கடன் வழங்கும் முகாம் மேட்டுநீரேத்தான் கிராம விவசாயக் கூடத்தில் நடைபெற்றது. முகாமுக்கு கிளைமேலாளர் சந்திரகுமார் தலைமை தாங்கினார். முன்னாள் கவுன்சிலர் ஆர்.கே. செல்வராஜ், முன்னோடி விவசாயிகள் தவமணி, வெங்கட்ராமன், திருப்பதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். வங்கி தொடர்பாளர் கட்டக்குளம் எல்லம்மாள் வரவேற்றார். விழாவில் மாவட்ட கிராம வளர்ச்சி மேலாளர் விஜயராணி மாடு, ஆடு மற்றும் விவசாயக் கடனுதவி ரூ. 15 லட்சத்துக்கான காசோலைகளை பயனாளிகளுக்கு வழங்கி கிராம வளர்ச்சியில் வங்கியின் செயல்பாடுகள் பற்றி பேசினார். இதில் ஏராளமான விவசாயிகள், மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

**வைகையில் தண்ணீர் திறக்கக்கோரி விவசாயிகள் சங்கம் ஆர்ப்பாட்டம்**

மானாமதுரை, திருப்புவனம், இளையான்குடி தாலுகா பகுதி விவசாய பணிகளுக்கும் சிவகங்கை மாவட்ட குடிநீர் தட்டுப்பாட்டை சமாளிக்கவும் வைகையில் தண்ணீர் திறக்கக்கோரி மானாமதுரையில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

பழைய பஸ் நிலையம் முன்பு நடந்த இந்த ஆர்ப்பாட்டத்துக்கு விவசாயிகள் சங்க ஒன்றியத் தலைவர்கள் ஆறுமுகம், ராமன் ஆகியோர் தலைமை வகித்தனர். விவசாய தொழிலாளர் சங்க மாவட்டச் செயலர் தண்டியப்பன் பேசுகையில் இந்தாண்டு மழைக்காலம் தொடங்கியும் மானாமதுரை, இளையான்குடி, திருப்புவனம் பகுதிகளில் போதுமான மழை இல்லை. கண்மாய்கள் வறண்டுள்ளன.

கடன் வாங்கி விவசாயப் பணிகளை தொடங்கிய விவசாயிகள் கவலையில் உள்ளனர். மழையையும் வைகைத் தண்ணீரையும் எதிர்பார்த்து பலர் விவசாயப் பணிகளை தொடங்காமல் உள்ளனர். விவசாய கூலித் தொழிலாளர்கள் பிழைப்புத்தேடி குடும்பத்துடன் வெளியூர் செல்கின்றனர்.

வைகையாற்றுக்குள் செயல்பட்டு வரும் குடிநீர் திட்டங்கள் வறட்சியால் செயலிழந்து விட்டன. இதனால் மாவட்டத்தில் குடிநீர் தட்டுப்பாடு நிலவுகிறது. எனவே மானாமதுரை, திருப்புவனம், இளையான்குடி பகுதியில் விவசாயப் பணிகளை மேற்கொள்ளவும் குடிநீர் தட்டுப்பாட்டை போக்கவும் வைகை அணையிலிருந்து தண்ணீர் திறந்து விட அரசு உத்தரவிட வேண்டும் என்றார்.

ஆர்ப்பாட்டத்தில் விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் அழகர்சாமி, மாவட்டச் செயலர் வீரபாண்டி, ஒன்றியச் செயலர்கள் ஆண்டி, சந்தியாகு, மார்க்சிஸ்ட் ஒன்றியச் செயலர் முத்துராமலிங்கபூபதி, முன்னாள் ஒன்றியச் செயலர் வெள்ளைமுத்து உள்பட விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர் சங்கங்களின் நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

**விதை விற்பனை மையங்களில் அதிகாரிகள் ஆய்வு**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள தனியார் விதை விற்பனை மையங்களில் விதையின் தரம் குறித்து வேளாண்துறை அதிகாரிகள் ஆய்வு நடத்தினர்.

காஞ்சிபுரம் மாவட்ட வேளாண்துறை இணை இயக்குநர் செüந்தரராஜன் தலைமையில் வேளாண்மை துறை அதிகாரிகள் மாவட்டம் முழுவதும் உள்ள விதை விற்பனை நிலையங்களில் கடந்த சில தினங்களாக ஆய்வு நடத்தி வருகின்றனர்.

இந்த ஆய்வின்போது, கொள்முதல் செய்துள்ள விதைகளுக்கு உரிய ஆவணங்கள் இருக்கிறதா, விதை சட்டத்தின்படி அனைத்து விதிமுறைகளும் முறையாக கடைபிடிக்கப்படுகிறதா உள்ளிட்டவை குறித்து பல்வேறு ஆய்வுகளை அதிகாரிகள் ஆய்வு நடத்தினர்.மாவட்டத்தில் உள்ள 16 தனியார் விதை விற்பனை நிலையங்களில் 300 மெட்ரிக் டன் அளவிலான விதை குவியல்களிலும் ஆய்வு செய்யப்பட்டது.விதை குவியல்களில் இருந்து 38 விதை மாதிரிகள் எடுக்கப்பட்டு பரிசோதனைக்கு அனுப்பப்பட்டன. அதன் முடிவு வந்த பிறகு அது குறித்த தகவல் மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பி வைக்கப்படும்.

இதில் ஏதேனும் குறைபாடுகள் இருப்பின் ஆட்சியரின் ஆலோசனைபடி தனியார் விதை விற்பனை நிலையங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.இந்த ஆய்வின்போது, விதை ஆய்வாளர்கள் ராஜபாண்டியன், தேசிய விநாயகம்,

வெங்கடாசலம், ஜோதிலட்சுமி ஆகியோர் உடனிருந்தனர்.விதை ஆதாரம், நிர்ணயம் பற்றி தகவல் அறிய சென்னை விதை ஆய்வு துணை இயக்குநர் அலுவலகத்துக்கு 044 - 2534 3339 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

**தீவிரமடைகிறது "பாய்லின்' புயல்**

வங்கக் கடலில் நிலைகொண்டிருந்த பாய்லின் புயல், தீவிரமடைந்து ஒடிஸா மாநிலம், பாரதீப் துறைமுகத்துக்கு 850 கி.மீ தொலைவில் மையம் கொண்டுள்ளது. இதன் காரணமாக ஆந்திரம் மற்றும் ஒடிஸாவில் சூறாவளிக் காற்று வீசக்கூடும் என்று வானிலை ஆராய்ச்சி மையம் எச்சரித்துள்ளது.

வடக்கு அந்தமான் கடல் பகுதியில் உருவான காற்றழுத்த தாழ்வு மண்டலம் வலுவடைந்து புதன்கிழமை புயலாக மாறியது. பாய்லின் என்று பெயரிடப்பட்டுள்ள இந்தப் புயல் பலவீனமடைந்து ஆந்திரம்-ஒடிஸா மாநிலங்களுக்கு இடையே 12-ம் தேதி கரையைக் கடக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், பாய்லின் புயல் வலுப்பெற்று தீவிரமடைந்துள்ளது. தற்போது இந்த புயல் கலிங்கப்பட்டினத்திலிருந்து 870 கி.மீ. தொலைவிலும், விசாகப்பட்டினத்திலிருந்து 900 கி.மீ. தொலைவிலும், பாரதீப் துறைமுகத்திலிருந்து 850 கி.மீ. தொலைவிலும் மையம் கொண்டுள்ளது.

தீவிரமடைந்துள்ள புயல் மேலும் வடமேற்கு திசையில் நகர்ந்து வரும் சனிக்கிழமை மாலை ஒடிஸா மாநிலம் பாரதீப் மற்றும் கலிங்கப்பட்டினத்துக்கு இடையே கரையைக் கடக்கும் என்றும் அப்போது மணிக்கு 175 முதல் 185 கி.மீ. வேகத்தில் சூறாவளிக் காற்று வீசும் என்றும் கன மழை பெய்யக்கூடும் என்றும் புவனனேசுவரத்திலுள்ள வானிலை ஆராய்ச்சி மைய இயக்குநர் சரத் சாஹூ தெரிவித்துள்ளார்.

ஒடிஸா மற்றும் ஆந்திரப் பிரதேச கடலோரப் பகுதிகளில் வெள்ளிக்கிழமை மணிக்கு 55 முதல் 65 கி.மீ. வேகத்தில் பலத்த காற்று வீசும் என்றும் இது மேலும் தீவிரமடைந்து ஒடிஸா தெற்கு மற்றும் ஆந்திரத்தின் வடக்கு பகுதிகளில் சனிக்கிழமை புயல் கரையைக் கடக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஒடிஸாவில் கஞ்சம், குர்தா, புரி, ஜகத்சிங்பூர் மாவட்டங்களிலும் ஆந்திரத்தின் ஸ்ரீகாகுளம் மாவட்டத்திலும் கடல் கொந்தளிப்பால் 1.5 மீட்டர் உயரத்துக்கு கடல் அலைகள் எழும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த 1999-ம் ஆண்டு ஒடிஸாவில் பெரும் புயல் ஏற்பட்டு அதனால் ஏராளமான உயிர்கள் பலியாயின. மேலும் மாநிலத்தில் 14 மாவட்டங்கள் வெகுவாக பாதிக்கப்பட்டன. அதேபோல் இப்போது தீவிரமடைந்துள்ள புயல், பெரும்புயலாக மாற வாய்ப்புள்ளதா என்று செய்தியாளர்கள் கேட்டதற்கு, தற்போதைய நிலவரப்படி தீவிரமடைந்துள்ள பாய்லின் புயல் சனிக்கிழமை பலவீனமடைந்து கரையைக் கடந்துவிடும் என்று எதிர்பார்க்கிறோம்.

இதன் காரணமாக ஒடிஸா மாநில கடலோரப் பகுதிகளிலும், ஆந்திரத்தில் வடக்கு கடலோரப் பகுதிகளிலும் பலத்த மற்றும் மிக பலத்த மழை பெய்யக்கூடும். இதைத் தொடர்ந்து மேற்குவங்க மாநிலத்தின் கடலோரப் பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை கன மழை பெய்ய வாய்ப்புள்ளது என்றும் தெரிவித்தார்.

புயல் தீவிரமடைந்துள்ளதை அடுத்து ஒடிஸா அரசு கந்தமால், கலஹண்டி, கோராபுட், மல்கான்கிரி, நவ்ரங்பூர், ராயகட்டா ஆகிய மாவட்டங்களில் புயல் எச்சரிக்கை விடுத்துள்ளது. ஏற்கெனவே பாலசூர், மயூர்பஞ்ச், கட்டாக், கேந்திரபாரா உள்ளிட்ட 14 மாவட்டங்களுக்கு புயல் அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடல் கொந்தளிப்புடன் காணப்படும் என்பதால் மீனவர்கள் கடலுக்குள் செல்ல வேண்டாம் என எச்சரிக்கப்பட்டுள்ளனர். இதேபோல கடலோரப் பகுதிகளில் வசிப்பவர்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

இதனிடையே முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சூழ்நிலையைச் சமாளிக்க மாநில அரசுக்கு உதவியாக துணை ராணுவப் படையினரை அனுப்பி வைக்குமாறு மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ஏ.கே.அந்தோனிக்கு ஒடிஸா முதல்வர் நவீன் பட்நாயக் கடிதம் எழுதியுள்ளார்.

**தமிழகத்தில் மழை வாய்ப்பு குறைவு**

சென்னை, அக்.10: "பாய்லின்' புயலால் தமிழகத்தில் மழை பெய்ய வாய்ப்பு குறைவு என வானிலை மையம் தெரிவித்துள்ளது. இருப்பினும் வெப்பச் சலனம் காரணமாக வெள்ளிக்கிழமை சென்னை உள்பட தமிழகத்தின் பல இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யும் என அறிவிப்பு வெளியாகியுள்ளது.

வெப்பச் சலனம் காரணமாக சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, வேலூர், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், நாமக்கல், நீலகிரி, திருப்பூர், கோவை, ஈரோடு, கரூர், திருச்சி, அரியலூர், பெரம்பலூர் உள்ளிட்ட இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை மையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வியாழக்கிழமை காலை 8.30 மணி வரை பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்):-

வேலூர் மாவட்டம் சோளிங்கர், திருவள்ளூர் மாவட்டம் தாமரைப்பாக்கம் - 80, சீர்காழி, நீலகிரி மாவட்டம் கேத்தி, ஆரணி, காட்டுமன்னார்கோயில் - 70, நீலகிரி மாவட்டம் தேவாலா - 60.

**ஒரு ஊரில் ஒரு விவசாயி**

தமிழ்நாட்டில் எந்த ஒரு ஊரிலும் இன்று விவசாயம் செழிப்பாக நடைபெறவில்லை. மாறாக ரியல் எஸ்டேட் தொழில்தான் நன்றாக செழித்து வளர்ந்து கொண்டிருக்கிறது.

நேற்றுவரை பயிர் செழித்து வளர்ந்து உணவு தந்த பூமி, இன்று மலடாக மாற்றப்பட்டு விட்டது. நகர்ப்புற விரிவாக்கமும், ரியல் எஸ்டேட் பெருக்கமும் ஊரில் இருந்த குளங்களையும், ஏரிகளையும், வயல்களுக்குத் தண்ணீர் பாய்ச்சும் சிறு சிறு கால்வாய்களையும் தூர்ந்து போகச் செய்துவிட்டன. நகர்ப்புறங்களை விரிவாக்குவதால் நாடு விரிவடைவதாக நவீனப் பொருளாதார மேதைகள் சொல்கின்றனர்.

உணவு தரும் நிலங்களை அழித்தோமானால் உணவு என்னாகும்? விவசாயி என்னாவான்? உணவு விஷமாக மாறியதும், விவசாயி இடம்பெயர்ந்து நகரத்தின் தெருக்களில் கூர்க்காவாக மாறியதும்தான் நாம் கண்ட பலன்.

இதுவரை இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள். ஒரு கோடி விவசாயிகள் விவசாயத்தை விட்டு வெளியேறி இருக்கிறார்கள். பதினான்கு கோடி விவசாயிகள் விவசாய நிலங்களை விற்றுவிட்டு விவசாயக்கூலிகளாக மாறியிருக்கிறார்கள்.

ரியல் எஸ்டேட் தொழில், நடுத்தர வர்க்கத்து மக்கள், ஏழை விவசாயிகள், அரசியல்வாதிகள், அதிகாரிகள் ஆகியோரை உள்ளடங்கிய சிக்கலான வலையமைப்பைக் கொண்டிருக்கிறது. மிகக்குறைந்த விலையில் விவசாய நிலங்களை வாங்கும் இடைத்தரகர்கள் அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகளின் உதவியுடன் வளம் கொழிக்கும் வீட்டு மனைகளாக மாற்றி நடுத்தர வர்க்கத்து மக்களுக்கு விற்பனை செய்கிறார்கள்.

தங்களது வாழ்வை மேலும் பிரகாசமாக்கிக் கொள்ள நடுத்தர வர்க்கத்து மக்களும் களத்தில் இறங்குகிறார்கள். ரியல் எஸ்டேட்காரர்களின் தந்திரம் மிக வலியது. வெறும் பொட்டல் காட்டில் சொர்க்கத்தின் கிளை ஒன்று வரப்போவதாகச் சொல்லி, அதைச்சுற்றிலும் வீட்டு மனைகளை உருவாக்குகிறார்கள். தரகர்கள் துணையுடன் நடுத்தர வர்க்க மக்களைக் கவர்கிறார்கள். அந்த மக்கள், சேமித்து வைத்திருக்கும் கொஞ்ச நஞ்ச பணத்தையும் மனையில் முதலீடு செய்கிறார்கள். சிலர் அம்முதலீடுகளை இழக்கவும் நேரிடுகிறது.

தங்கள் குழந்தைகளின் கல்வியை, உணவை, ஊட்டச்சத்தை, பொழுதுபோக்கை தியாகம் செய்து சேர்த்த சேமிப்புதான் அவர்கள் இழக்கும் தொகை. ஏமாற்றுபவர்களை சட்டப்படி தண்டித்துவிடலாம். ஆனால் ஏமாறுபவர்களை எந்த சட்டத்தாலும் காப்பாற்ற முடியாது.

ரியல் எஸ்டேட் தவிர வேறு பல்வேறு பெரிய தொழில் நிறுவனங்களும் விவசாய நிலங்களை வாங்கிக் குவிக்கின்றன. அத்தொழிற்சாலை உறிஞ்சும் தண்ணீர், சுற்றியுள்ள பகுதிகளையும் வறண்ட பகுதிகளாக்கி விடுகிறது. ரியல் எஸ்டேட் தொழில் செய்யும் எல்லாருமே இப்படிப்பட்டவர்கள் என்று கூற முடியாது. நேர்மையாக தொழில் செய்பவர்களும் இருக்கிறார்கள்.

அதுபோலவே இச்சூழலை எதிர்த்து வெற்றிகரமாக விவசாய வாழ்க்கையை நடத்தும் விவசாயிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

எங்கள் எதிர்வீட்டு தாத்தா ஒருவர் தேசிய நெடுஞ்சாலைக்குப் பக்கத்திலேயே பல ஏக்கர் நிலங்களுக்குச் சொந்தக்காரர். அவரது நிலத்தைச் சுற்றி ரியல் எஸ்டேட்காரர்கள் வந்து விட்டாலும் அவர் மட்டும் தன் நிலத்தில் கரும்பு,சோளம் பயிரிடுவதைக் கைவிடவில்லை. நிலத்தை விற்று சொத்துகளைப் பிரிக்கவேண்டும் என்னும் குடும்பத்தாரின் கோரிக்கையையும் அவர் நிராகரித்துவிட்டார். ரியல் எஸ்டேட்காரர்கள் இன்னும் எவ்வளவு நாளைக்கு அவரை விட்டுவைப்பார்கள் என்று தெரியவில்லை.

**மேட்டூர் அணையிலிருந்து  தண்ணீர் திறப்பு குறைப்பு**

மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்திற்கு திறக்கப்படும் நீரின் அளவு வியாழக்கிழமை குறைக்கப்பட்டது.

மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்திற்கு கடந்த ஒரு வாரமாக நொடிக்கு 23 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டது. தற்போது காவிரி டெல்டா மாவட்டங்களில் பரவலாக மழை பெய்வதால், பாசனத் தேவை குறைந்துள்ளது.

இதனால், வியாழக்கிழமை முதல் மேட்டூர் அணையிலிருந்து திறக்கப்படும் நீரின் அளவு நொடிக்கு 18 ஆயிரம் கன அடியாகக் குறைக்கப்பட்டுள்ளது.

காவிரி நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் மழை பெய்வதால், வியாழக்கிழமை மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு நொடிக்கு 5,286 கன அடியாக அதிகரித்தது. அணையின் நீர் மட்டம் 87.09 அடியாக இருந்தது. நீர் இருப்பு 49.38 டி.எம்.சியாக இருந்தது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**11.10.2013**

## கரும்பு விளைச்சலில் சாதனை படைக்கும் தேனி விவசாயிகள்

தேனி :தேனி மாவட்ட விவசாயிகள், கரும்பு விளைச்சலில் மாநில சராசரியை விட அதிகளவில் விளைவித்து சாதனை படைத்துள்ளனர்.
தமிழகத்தில் 3 லட்சத்து 20 ஆயிரம் ஹெக்டேரில் கரும்பு விளைகிறது. 2011-2012ல் 3 லட்சத்து 50 ஆயிரம் ஹெக்டேரில் கரும்பு சாகுபடி செய்யப்பட்டது.இந்தியாவில் கரும்பு உற்பத்தி திறன் ஹெக்டேருக்கு 67 டன். தமிழகத்தின் சராசரி உற்பத்தி திறன் ஹெக்டேருக்கு 105 டன். ஆனால், தேனி, திண்டுக்கல், நாமக்கல் மாவட்டங்களில் மாநில சராசரியை விட அதிகளவு கரும்பு விளைக்கப்படுகிறது.இதில் தேனி மாவட்டம் ஹெக்டேருக்கு 121.103 டன் விளைவித்து முதலிடம் பெற்றுள்ளது. இங்கு, தற்போது 1618 ஹெக்டேரில் கரும்பு விளைவிக்கப்படுகிறது. 2011ல் 6400 ஹெக்டேரில் சாகுபடி செய்யப்பட்டது. 2012-13ல் இதை விட கூடுதல் பரப்பில் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. புதிதாக மூன்று ரகங்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.இவை 155 டன் விளைச்சல் தரக்கூடியவை. தவிர, இந்த புதிய ரகங்களில் சர்க்கரை கட்டுமான திறன் 13.05 சதவீதமாக உள்ளது.இந்த ரகங்கள் சர்க்கரை கட்டுமானத்திற்கு மட்டுமின்றி, வெல்லம் உற்பத்திக்கும் அதிகம் பயன்படும், என விவசாயத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## சாயல்குடியில் கால்வாய் தடுப்பு நிலக்கடலை பாதிக்கும் அபாயம்

சாயல்குடி :சாயல்குடி கண்மாய்க்கு வரும் சக்கரைத்தேவன் கால்வாய் தனிநபரால் தடுக்கப்பட்டதால், வரத்து நீர் பெருகி, நிலக்கடலை சேதமடையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

சாயல்குடி கண்மாய் பெருகும் பட்சத்தில் குடிநீர் பிரச்னை தீரும். மேலும், இரு முறை நெல் பயிரிடலாம். கடந்த காலங்களில் கால்வாய்கள் சீரமைப்பின்றி புதர்மண்டி மேடு, பள்ளமாக உள்ளன. மழைகாலங்களில் தண்ணீர் வயல்களில் பாய்ந்து விவசாயம் பாதித்தது.இந்நிலையில், சாயல்குடி கண்மாய் முகத்துவாரம் தனிநபரால், தடுக்கப்பட்டுள்ளது.மழைபெய்தால் வரத்து நீர் பெருகி கரை உடைப்பு ஏற்பட்டு பயிரிடப்பட்டுள்ள நிலக்கடலை பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. மேலும், நூற்றுக்கும் மேற்பட்ட ஏக்கர் புஞ்சை நிலங்களில் சாகுபடி பாதிக்கும். இதனால், தடுப்பை விரைவில் அகற்ற மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## கே.ஆர்.பி., அணை நீர் மட்டம் உயர்வு திண்டல் ஏரிக்கு தண்ணீர் திறப்பு

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி கே.ஆர்.பி., அணை நீர் மட்டம் உயர்ந்து வருகிறது. அணை வலது புற கால்வாய் மூலம் திண்டல் உள்ளிட்ட, 15 ஏரிகளுக்கும், பாரூர் ஏரியில் இருந்து பெனுகொண்டாபுரம் ஏரிக்கும் உபரி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

கர்நாடகா மாநிலத்தில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக ஓசூர் அடுத்த கெலவரப்பள்ளியில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள கெலவரப்பள்ளி அணைக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது.

நேற்று காலை நிலவரபடி அணைக்கு வினாடிக்கு, 600 கன அடி நீர் வந்தது. அணையின் மொத்த கொள்ளவு, 52 அடியாகும். தற்போது, 41.5 அடி தண்ணீர் உள்ளது. அணையின் பாதுகாப்பு கருதி அணையில் இருந்து வினாடிக்கு, 400 கன அடிநீர் தென்பெண்ணை ஆற்றில் திறந்து விடப்பட்டுள்ளது.

கெலவரப்பள்ளி அணையில் திறந்து விடப்பட்ட தண்ணீர் கிருஷ்ணகிரி அடுத்த கே.ஆர்.பி., அணைக்கு வருகிறது. நேற்று மாலை நிலவரப்படி அணைக்கு வினாடிக்கு, 270 கன அடி நீர் வந்தது. நேற்று மாலை நிலவரப்படி அணை நீர் மட்டம் 49.1 அடியாக உயர்ந்தது.

கே.ஆர்.பி., அணையில் இருந்து முதல் போக நெல்சாகுபடிக்கு இடது மற்றும் வலது புறகால்வாயில் வினாடிக்கு, 70 கன அடிநீர் திறந்து விடப்பட்டுள்ளது.

அணையின் வலது புறகால்வாய் கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு முன், 30 கி.மீ., நீட்டிக்கப்பட்டு தர்மபுரி மாவட்டம் காரிமங்கலம் அடுத்த திண்டல் ஏரிவரை செல்கிறது.
திண்டல் ஏரிக்கு தண்ணீர் விட வேண்டும் என்று அப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விட்டடத்தையடுத்,து கே.ஆர்.பி., அணை வலது புறகால்வாயில் அணை உபரி நீர் நேற்று முன்தினம் முதல் திறந்துவிடப்பட்டது.
இந்த நீர் தற்போது கரகூர், பொம்மசந்திரம், திண்டல் ஏரி உள்ளிட்ட, 15 ஏரிகளுக்கு தண்ணீர் விடப்பட்டுள்ளது. இந்த ஏரிகள் நிரம்பும் பட்சத்தில் தட்ரஅள்ளி ஏரிக்கும் தண்ணீர் விடப்படும். இப்பகுதி ஏரி பாசனம் மூலமும் மேலும் நிலத்தடி நீர் மட்டம் உயர்வதன் மூலமும், 3 ஆயிரம் ஏக்கருக்கு மேல் பாசன வசதி பெறும்.
மேலும், பாரூர் சுற்றுவட்டார பகுதியில் பெய்த கன மழை காரணமாக பாரூர் ஏரிக்கு நீர் வரத்து அதிகரித்து ஏரி நிரம்பியதால் மத்தூர் அடுத்த பெனுகொண்டாபுரம் ஏரிக்கும் பாரூர் ஏரியில் இருந்து உபரி நீர் திறந்து விடப்பட்டுள்ளது. பெனு கொண்டாபுரம் ஏரி நிரம்பினால் அந்த பகுதியில், 500 ஏக்கருக்கு மேல் பாசன வசதி பெறும்.

## வாழை விலை கிலோவுக்கு ரூ.20 வீழ்ச்சி

கோபிசெட்டிபாளையம்: ஆயுதபூஜை பண்டிகை நேரத்தில் வாழை விலை கிலோவுக்கு, 20 ரூபாய் வீழ்ச்சியடைந்ததால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.
கோபி பகுதியில், வேட்டைக்காரன் கோவில், பங்களாபுதூர், கள்ளிபட்டி, டி.என்.பாளையம், கோபி, கொளப்பலூர், கூகலூர் உள்ளிட்ட பகுதிகளில் ஆற்று பாசனம் மற்றும் கிணற்று பாசனம் மூலம், 10 ஆயிரம் முல், 15 ஆயிரம் ஏக்கரில் கதளி, நேந்திரம், ரோபஸ்டரா, ரஸ்தாளி, மொத்தன், பச்சைவாழை, பூவன், தேன் வாழை ஆகிய ரக வாழை பயிரிடப்பட்டுள்ளன.
கோபி, பவானி, பெருந்துறை, கவுந்தபாடி சுற்று வட்டாரத்தில், அறுவடை செய்யப்படும் வாழை, கோபி வேளாண்மை விற்பனை சங்கத்தில் நடக்கும்

ஏலத்துக்கு கொண்டு வரப்படுகிறது. இச்சங்கத்தில் புதன் மற்றும் சனிக்கிழமை நாட்களில் ஏலம் நடக்கிறது.

கடந்த சில வாரங்களாக சராசரியாக, 7,000 தார்கள் வரை வரத்தாகுகிறது. கடந்த வாரத்தில், கோபி பகுதியில் சூறாவளி காற்று வீசியதால், 50 ஏக்கர் வாழை சேதமாகியது. இதனால், புதன் கிழமை நடந்த ஏலத்தில், 11,000 வாழைத்தார் மட்டுமே வந்தது. தமிழகத்தின் பல்வேறு பகுதியை சேர்ந்தவர்கள் ஏலத்தில், வாழை கொள்முதல் செய்தனர்.

ஆயுத பூஜை நேரத்தில், வாழை விலை உயரும் என விவசாயிகள் எதிர்பார்த்தனர். ஆனால், வாழை வரத்து அதிகரித்து, 54 ரூபாய்க்கு விற்கப்பட்ட கதளி, ஒரு கிலோ, 34 ரூபாயாகவும், 52 ரூபாய்க்கு விற்ற நேரத்திரம், 36 ரூபாயாக குறைந்தது. வாழை விலை வீழ்ச்சி, விவசாயிகளை கவலையடைய செய்துள்ளது.

வாழை விலை, தற்போதைய நிலவரப்படி, கதளி ஒரு கிலோ, 34 ரூபாய், நேரத்திரம் ஒரு கிலோ, 36 ரூபாய், பூவன் தார், 650 ரூபாய், தேன்வாழை, 500 ரூபாய், செவ்வாழை, 600 ரூபாய், ரஸ்தாளி, 400 ரூபாய், மொந்தன், 500 ரூபாய், பச்சைநாடன், 250 ரூபாய், ரொபஸ்டிரா, 450 ரூபாய்க்கு விற்கப்பட்டன.

விவசாயிகள் கூறியதாவது:

மஞ்சள் விலை வீழ்ச்சி, கரும்பு வெட்டு கூலி உயர்வு போன்ற பிரச்னையால், கிணற்று நீரால், வாழை அதிகளவில் பயிரிட்டோம். கடந்த சில நாட்களாக, வாழை விலை சுமாராக இருந்தது. கடந்த சில வாரங்களாக, பழனி தேவஸ்தானம், ஏலத்தில் கலந்து கொண்டு நேரடியாக, வாழை கொள்முதல் செய்ததால், வாழை இரு மடங்காக உயர்ந்துள்ளது. வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு, வாழை விலை உயர்வு மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. ஆயுத பூஜை பண்டிகை நேரத்தில், வாழை விலை உயரும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், கதளி, நேரத்திரம் ஆகியவை கிலோவுக்கு, 20 ரூபாய் வரையும், மற்ற வாழை தாருக்கு, 50 ரூபாய் வரை வீழ்ச்சியடைந்துள்ளது, என்றனர்.

## சூரியகாந்தி விற்கும் தருணம் இது வேளாண் பல்கலை அதிகாரி தகவல்

கரூர்: "இனி விலை உயர வாய்ப்பு இல்லை என்பதால், சூரியகாந்தி விதையை விற்க இதுவே ஏற்ற தருணம்' என்று, கோவை வேளாண் பல்கலை ஏற்றுமதி சந்தை தகவல் மைய இயக்குனர் அஜ்ஜன் கூறினார்,.

அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

சூரியகாந்தி இந்தியாவின் மிக முக்கியமான எண்ணெய் வித்துப்பயிராகும். இது சாகுபடி பரப்பு மற்றும் உற்பத்தி அடிப்படையில் எண்ணெய் வித்துப் பயிர்களோடு ஒப்பிடுகையில், நான்காம் இடத்தை பெற்றுள்ளது.

இந்தியாவில், 2012 -13ல் சூரியகாந்தி உற்பத்தி, 6.15 லட்சம் டன்னாக இருந்தது. தமிழகத்தில், 2010-11ல் 8,718 ஹெக்டேர் பரப்பளவில், 10,039 டன் சூரியகாந்தி விதை உற்பத்தி செய்யப்பட்டது.

கரூர், தூத்துக்குடி, திருச்சி, தர்மபுரி மற்றும் விருதுநகர் மாவட்டங்கள் சூரியகாந்தி சாகுபடி செய்வதில் பங்குவகிக்கின்றன. சூரியகாந்தி கார்த்திகை (அக்டோபர் முதல் நவம்பர் வரை) மற்றும் சித்திரைப் பட்டங்களில் (ஏப்ரல் முதல் மே வரை) பயிரிடப்படுகிறது. அதிகமான வரத்து மார்ச் மே, ஜூன் மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் இருக்கிறது. தமிழ் நாட்டில் தற்போது சித்திரைப் பட்டத்தில் சாகுபடி செய்த சூரியகாந்தி அறுவடை செய்து சந்தைக்கு வர தொடங்கி உள்ளது. தமிழகத்தில் வெள்ளக்கோவில், மூலனூர் மற்றும் கொடுமுடி ஆகிய பகுதிகள் சூரியகாந்தி அதிகமாக வரத்து வரும் சந்தை மையங்களாகும். இறவை சாகுபடியில் சராசரியாக ஏக்கருக்கு, 1,000 முதல் 1,200 கிலோ வரை சூரியகாந்தி விதை மகசூல் எடுக்கலாம்.

ஆனால், தர மற்ற விதை, பூச்சி தாக்குதல், போதிய மின்சாரம், மழை பற்றாக்குறை மற்றும் பணியாளர்கள் தட்டுப்பாடு ஆகிய காரணங்களால் இந்த பருவத்தில் சூரியகாந்தி மகசூல் ஒரு ஏக்கருக்கு, 500 கிலோ முதல் 600 வரை மட்டுமே கிடைத்துள்ளது. சூரியகாந்தியின் சாகுபடி பரப்பு மற்றும் மகசூல் இரண்டுமே குறைந்துள்ளதால் சந்தைக்கு வரும் விதைகளின் அளவும் குறைந்துள்ளது. விவசாயிகள் இப்பட்டத்தில் அறுவடை செய்யப்படும் சூரியகாந்தி விதையை விற்பது தொடர்பான முடிவுகளை எடுப்பதற்கு ஏதுவாக தமிழ்நாடு வேளாண்

பல்கலைக்கழகத்தில் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம் வெள்ளக்கோவில் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில், கடந்த, 13 ஆண்டாக நிலவிய விலையை ஆராய்ந்தது.

இதில், ஆய்வு முடிவுகளின் படி சூரியகாந்தி விதையின் பண்ணை விலை புரட்டாசி மற்றும் ஐப்பசி மாதங்களில் கிலோ ஒன்றிற்கு சராசரியாக, 38 ரூபாய் இருக்கும்.

விலையேற்றத்திற்கான வாய்ப்புகள் குறைவாக உள்ளதால் விவசாயிகள் அறுவடை செய்யும் சூரியகாந்தியை உடனே விற்க வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

### மூன்று விதமான பயன் தரும் கம்பு

ஆர்.கே.பேட்டை:மூன்று மாதத்தில் அறுவடைக்கு தயாராகும் கம்பு, மூன்று விதமான பயன்களை அளிக்கிறது.

மானாவாரி பயிராக, விதைக்கப்பட்ட, கம்பு பயிர் அறுவடை, தற்போது தீவிரமாக நடந்து வருகிறது. எந்த விதமான கூடுதல் செலவ ும் இன்றி, விதைக்கப்பட்ட கம்பு பயிரில், விவசாயிகள், மூன்று விதத்தில் பயனடைகின்றனர்.

கம்பு, எளிமையான, சத்தான உணவாக பயன்படுகிறது. ஒரு கிலோ கம்பு, 10 ரூபாய் முதல் 15 ரூபாய் வரை, விற்பனை செய்யப்படுகிறது.

கதிர் அறுக்கப்பட்ட கம்பு செடி, தனியாக வெட்டி எடுக்கப்பட்டு, குடிசைகளுக்கு கூரை வேய பயன்படுகிறது. கம்பு செடிகள் வேயப்பட்ட கூரை, குளிர்ச்சியை தரக்கூடியது.

இந்த இரண்டு பயன்களுடன், மூன்றாவது பயனாக, அறுவடைக்கு பின், கம்பு செடிகள், நிலத்துடன் சேர்த்து உழவு செய்யப்படுகின்றன. இதனால், நிலத்திற்கு தழைச்சத்து கிடைக்கிறது. எளிதில் மக்கும் தன்மை கொண்டது, கம்பு செடி என்பதால், ஆறடி நீள செடிகளும், விரைவில், நிலத்திற்கு உரமாக மாறி விடுகின்றன.

இது போன்று, மூன்று மாத கம்பு பயிரில் விவசாயிகள், மூன்று விதங்களில் பயனடைகின்றனர்.

### கால்நடை திட்ட சிறப்பு முகாம்

தர்மபுரி: தர்மபுரி யூனியன், குப்பூர் பஞ்சாயத்துக்கு உட்பட்ட சித்தன்கொட்டாய் கிராமத்தில், கால்நடை பாதுகாப்பு திட்ட சிறப்பு முகாம் நடந்தது.

தர்மபுரி கோட்ட உதவி இயக்குனர் இளங்கோவன், செட்டிக்கரை கால்நடை மருந்தக உதவி மருத்துவர் சரவணன், பயிற்சி கால்நடை மருத்துவர்கள் புவனேஸ்வரி, பவித்ரா, கால்நடை ஆய்வாளர் சந்திரன் ஆகியோர் கால்நடைகளை பரிசோதனை செய்து சிகிச்சை அளித்தனர்.

முகாமில், 255 மாடுகளுக்கு கோமாரி தடுப்பூசியும், 616 ஆடுகளுக்கு குடற்புழு நீக்கம், 30 மாடுகளுக்கு சினை ஊசி உள்ளிட்ட பல்வேறு சிகிச்சைகள் அளிக்கப்பட்டது. வார்டு உறுப்பினர் விஜயரங்கன் உட்பட பலர் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை செட்டிக்கரை கால்நடை மருந்தக ஊழியர்கள் செய்திருந்தனர்.

### கூடுதலாக ரூ.35 ஆயிரம் கோடி உர மானியம் வழங்க கோரிக்கை

புதுடில்லி:உர நிறுவனங்கள் மூடுவிழா காண்பதை தடுத்து, அவற்றுக்கான நிலுவைத் தொகையை வழங்க, கூடுதலாக, 35 ஆயிரம் கோடி ரூபாய் மானியம் வழங்க வேண்டும் என, உர அமைச்சர் ஸ்ரீகாந்த் ஜெனா, மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரத்திற்கு கடிதம் எழுதியுள்ளார்.

மதிப்பீடு:அதில், மேலும் கூறியிருப்பதாவது:நடப்பு, 2013–14ம் நிதியாண்டிற்கு, உர நிறுவனங்களுக்கு, 1,05,497 கோடி ரூபாய் மானியம் தேவைப்படும் என, மதிப்பிடப்பட்டு உள்ளது. இதில், உரத் துறைக்கு, 70,586 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கப்பட்டு உள்ளது.

தற்போது, உர நிறுவனங்களின் நிலை மிகவும் கவலை அளிக்கிறது. மானிய நிலுவை கிடைக்காததால், அவை, கடும் நெருக்கடியை சந்தித்து உள்ளன.நிதிப் பிரச்னையால், நேஷனல் பெர்டிலைசர்ஸ் மற்றும் மெட்ராஸ் பெர்டிலைசர்ஸ் நிறுவனங்கள், இம்மாத இறுதியில் மூடப்படும் அபாயம் உள்ளது.

மத்திய அரசு, மானிய ஒதுக்கீடு முழுவதையும், உள்நாட்டு யூரியா தயாரிப்பு

நிறுவனங்களுக்கு வழங்கிவிட்டது. இதனால், இதர நிறுவனங்கள் நெருக்கடியில் சிக்கிஉள்ளன.

**நிலுவை:**உரத் துறை, உள்நாட்டில் யூரியாவை தயாரிக்கும் உர நிறுவனங்களுக்கு, கடந்த மே மாதம் வரையிலான நிலுவையை மட்டுமே வழங்க முடியும். அது போன்று, யூரியா சாராத உர நிறுவனங்களுக்கு, நடப்பு மாதம் வரை மட்டுமே மானியம் வழங்க முடியும்.இரண்டாவது துணை மானியக் கோரிக்கை, வரும் டிசம்பரில் தான் தாக்கல் செய்யப்படும் என்பதால், உடனடியாக கூடுதல் நிதியை வழங்க வேண்டும்.

மானிய கோரிக்கை:ஏற்கனவே, முதல் துணை மானியக் கோரிக்கையின் கீழ் பெற்ற நிதி, இன்னும் உரத் துறைக்கு வழங்கப்படவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு, கடிதத்தில் கூறப்பட்டு இருந்தது.

உரத் துறை, சிறப்பு வங்கி செயல் திட்டத்தின் கீழ், கூடுதலாக, 15,500 கோடி ரூபாய் ஒதுக்குமாறு கோரியிருந்தது. இதில், 5,500 கோடி ரூபாய் மட்டும் தான், கடந்த செப்டம்பரில் ஒதுக்கப்பட்டது.

இதனிடையே, மானிய நிலுவையை, 14.75 சதவீத வட்டியுடன் வழங்கக் கோரி, இந்திய உர நிறுவனங்கள் கூட்டமைப்பு, டில்லி ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்துள்ளது.

## தமிழகத்தில் முட்டை விலை340 காசுகளாக நிர்ணயம்



நாமக்கல்:தமிழகம், கேரளாவில், முட்டை விலை, 340 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது.

நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம், நேற்று நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து, பண்ணையாளர்கள் விவாதித்தனர்.இதையடுத்து, 338 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை விலையை, இரண்டு காசுகள் அதிகரித்து, 340 காசுகளாக நிர்ணயம் செய்வதென முடிவு செய்யப்பட்டது.

நாட்டின் பிற மண்டலங்களில், முட்டை விலை (காசுகளில்) நிலவரம்:சென்னை, 336, பெங்களூரு, 330, மைசூரு, 333, ஐதராபாத், 310, மும்பை, 344, விஜயவாடா, 320, கோல்கட்டா, 375, பர்வாலா, 312, டில்லி, 325.நாமக்கல்லில், நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், முட்டைக் கோழி விலை கிலோ, 61 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், அதன் விலை கிலோ, 55 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**11.10.2013**

**ஆலைகளின் சர்க்கரை கையிருப்பு 85 லட்சம் டன்னாக உயர்ந்தது**



புதுடெல்லி

ஆலைகளிடம் 85 லட்சம் டன் சர்க்கரை கையிருப்பு உள்ளது என்றும், அளவுக்கதிகமான கையிருப்பால் பாதிப்பு ஏற்படும் என்றும் இந்திய சர்க்கரை ஆலைகள் சங்கம் (இஸ்மா) தெரிவித்துள்ளது.

<u>இக்கட்டான நிலை</u>

கடந்த 2012–13 பருவம் (அக்டோபர்–செப்டம்பர்) தொடங்கும்போது ஆலைகள் வசம் 62 லட்சம் டன் சர்க்கரை கையிருப்பு இருந்தது. ஆனால் இம்மாதம் தொடங்கியுள்ள புதிய பருவத்தில் தொடக்க கையிருப்பு 85 லட்சம் டன்னாக உள்ளது. மேலும் இப்பருவத்தில் தேவைக்கு அதிகமான அளவில் சர்க்கரை உற்பத்தி இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது ஒரு இக்கட்டான நிலை என்றும், மத்திய, மாநில அரசுகள் இந்த கையிருப்பை குறைப்பதற்கு தகுந்த

நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்றும் சர்க்கரை ஆலைகள் சங்கத்தின் தலைமை இயக்குனர் அபினாஷ் வர்மா தெரிவித்தார்.

இதன் ஓர் அங்கமாக கரும்பு விலையை நிர்ணயம் செய்வதில் ஆலைகளுக்கு பாதிப்பில்லாத அணுகுமுறை வேண்டும் என இச்சங்கம் விரும்புகிறது. தற்போது சர்க்கரை ஆலைகள் கரும்புக்காக விவசாயிகளுக்கு தர வேண்டிய நிலுவை தொகை ரூ.3,000 கோடியாக உள்ளது. ஆனால் மத்திய, மாநில அரசுகள் ஆதரவு அளிக்கவில்லையென்றால் நிலுவை தொகை மேலும் அதிகமாகும் என ஆலைகள் சங்கம் தெரிவித்துள்ளது.

நம் நாட்டில் ஓர் ஆண்டுக்கு 2.35 கோடி டன் சர்க்கரை தேவைப்படுகிறது. எனினும் நடப்பு பருவத்தில் (2013 அக்டோபர் – 2014 செப்டம்பர்) 2.50 கோடி டன் சரக்கரை உற்பத்தியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் 15 லட்சம் டன் சர்க்கரை உபரியாக இருக்கும். கையிருப்பு ஏற்கனவே அதிகமாக உள்ள நிலையில் இருப்பை குறைக்க வேண்டுமென்றால் சர்க்கரை ஆலைகள் ஏற்றுமதியில்தான் கவனம் செலுத்த வேண்டியிருக்கும் என இஸ்மா கூறியுள்ளது.

உத்தரபிரதேசம்

கரும்பு அதிகம் விளையும் உத்தரபிரதேச மாநில அரசு ஆலோசனை விலையை அறிவித்த பின் ஆலைகளில் கரும்பு அரவைப் பணிகள் தொடங்கும் என தெரிகிறது. சர்க்கரை உற்பத்தியில் முதலிடத்தில் உள்ள மகாராஷ்டிராவில் இம்மாத இறுதியில் கரும்பு அரவை தொடங்க வாய்ப்புள்ளது.

**நடப்பு பருவத்தில், பருத்தி ஏற்றுமதி உயர வாய்ப்பில்லை மத்திய ஜவுளி அமைச்சகம் தகவல்**



புதுடெல்லி

நடப்பு 2013–14 பருவத்தில் (அக்டோபர்–செப்டம்பர்) பருத்தி உற்பத்தி 3.70 கோடி முதல் 3.75 கோடி பொதிகள் வரை இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது இப்பருவத்தில் பருத்தி ஏற்றுமதி உயர வாய்ப்பில்லை என்றும், கடந்த பருவத்தைப் போல் ஒரு கோடி பொதிகள் ஏற்றுமதியாகும் என்றும் மத்திய ஜவுளி அமைச்சர் கே.எஸ்.ராவ் தெரிவித்துள்ளார்.

<u>உள்நாட்டுத் தேவை</u>

ஒரு பொதி என்பது 170 கிலோ பருத்தியைக் கொண்டது. நடப்பு பருவத்தில் 3.70 கோடி பொதி பருத்தி உற்பத்தியாக உள்ள நிலையில் உள்நாட்டில் 2.70 கோடி பருத்தி பொதிகளுக்குத்தான் தேவை இருக்கும். எனவே ஒரு கோடி பருத்தி பொதிகளை ஏற்றுமதி செய்ய இயலும் என ராவ் தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் அண்மையில் மாநில ஜவுளி அமைச்சர்களின் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அதற்கு தலைமை தாங்கிப் பேசிய ராவ், இந்த தகவல்களை வெளியிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது–

கடந்த பருவத்தில் பருத்தி உற்பத்தி ஏறக்குறைய 3.40 கோடி பொதிகளாக இருந்தது. அப்போது உள்நாட்டு பயன்பாடு 2.60 கோடி பொதிகளாக இருந்தது. ஏற்றுமதி ஒரு கோடி பொதிகளாக இருந்தது. இந்நிலையில் பருத்தி விவசாயிகளுக்கு நல்ல ஊக்கமளிக்க மத்திய அரசு விரும்புகிறது.


பருத்தி உற்பத்தியை பொறுத்தவரை வளர்ச்சியடைந்த நாடுகளில் பின்பற்றப்படும் நடைமுறைகள் கையாளப்பட வேண்டும். மேலை நாடுகளுடன் ஒப்பிடும்போது நம் நாட்டில் ஒரு ஏக்கர் வாயிலான மகசூல் மிகவும் குறைவாக உள்ளது. எனவே இப்பிரிவில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகள் தீவிரமாக வேண்டும் என அரசு விரும்புகிறது. பருத்தி விநியோக கொள்கை குறித்து முடிவு செய்யும் பொறுப்பு மத்திய அமைச்சர்கள் குழு ஒன்றிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது குறித்து விவாதிக்க இக்குழு விரைவில் கூட உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

<u>சரத் பவார்</u>

பருத்தி விநியோகம் குறித்து விவாதிக்க உள்ள மத்திய அமைச்சர்கள் குழுவில் சரத் பவார், ஆனந்த் சர்மா, ஆர்.எஸ். ராவ் மற்றும் சிலர் இடம் பெற்றுள்ளனர். மத்திய ஜவுளி அமைச்சகத்தின் கீழ் செயல்பட்டு வரும் பருத்தி ஆலோசனை வாரியம் பருத்தி உற்பத்தி குறித்த மதிப்பீட்டை இன்னும் வெளியிடவில்லை. அதே சமயம் வேளாண் அமைச்சகம் நடப்பு பருவத்தில் பருத்தி மகசூல் 3.53 கோடி பொதிகளாக இருக்கும் என தெரிவித்துள்ளது

**ஏப்ரல்–செப்டம்பர் மாத காலத்தில் முன்பேர சந்தைகளின் வர்த்தகம் ரூ.65.68 லட்சம் கோடியாக சரிவு**



புதுடெல்லி

நடப்பு நிதி ஆண்டின் முதல் அரையாண்டில் (ஏப்ரல்–செப்டம்பர்) முன்பேர சந்தைகளின் வர்த்தகம் 25 சதவீதம் குறைந்து ரூ.65.68 லட்சம் கோடியாக சரிவடைந்துள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே காலத்தில் ரூ.87.62 லட்சம் கோடியாக இருந்தது.

<u>வேளாண் விளைபொருள்கள்</u>

பல்வேறு விளைபொருள்கள் மீதான வர்த்தகம் அளவு அடிப்படையில் மிகவும் குறைந்துள்ளதே இதற்கு காரணமாகும். விளைபொருள்கள் மீதான வர்த்தகத்தில் அதிகபட்சமாக வேளாண் விளைபொருள்கள் மீதான வர்த்தகம் மிகவும் சரிவடைந்துள்ளது. அடுத்து தங்கம் மற்றும் வெள்ளி, சாதாரண உலோகங்கள், எரிபொருள்கள் மீதான வர்த்தகம் குறைந்துள்ளது.

கணக்கீடு செய்ய எடுத்துக்கொண்ட காலத்தில் விவசாய விளைபொருள்கள் மீதான வர்த்தகம் 37.16 சதவீதம் குறைந்து 7.47 லட்சம் கோடியாக சரிவடைந்துள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே காலத்தில் ரூ.11.89 லட்சம் கோடியாக இருந்தது. தங்கம் மற்றும் வெள்ளி உலோகங்கள் மீதான வர்த்தகம் 27 சதவீதம் குறைந்து ரூ.40.61 லட்சம் கோடியிலிருந்து ரூ.29.62 லட்சம் கோடியாக சரிவடைந்துள்ளது.

சாதாரண உலோகங்கள் மீதான முன்பேர வர்த்தகம் 24 சதவீதம் சரிந்து ரூ.16.09 லட்சம் கோடியிலிருந்து ரூ.12.20 லட்சம் கோடியாக குறைந்துள்ளது. கச்சா எண்ணெய் உள்ளிட்ட எரிபொருள்கள் மீதான வர்த்தகம் 14 சதவீதம் குறைந்து ரூ.16.27 லட்சம் கோடியாக சரிவடைந்துள்ளது. இது, சென்ற நிதி ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் ரூ.19.02 லட்சம் கோடியாக இருந்தது.

எம்.சி.எக்ஸ்.

தற்போது தேசிய அளவில் 6 சந்தைகளும், பிராந்திய அளவில் 15 சந்தைகளுமாக மொத்தம் 21 முன்பேர வர்த்தக சந்தைகள் செயல்பட்டு வருகின்றன. இவை அனைத்தும் எஃப்.எம்.சி. என்று அழைக்கப்படும் முன்பேர வர்த்தகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகின்றன. முன்பேர சந்தைகளில் நடைபெறும் மொத்த வர்த்தகத்தில் எம்.சி.எக்ஸ். சந்தையின் பங்களிப்பு 80 சதவீதமாக உள்ளது.

**தமிழ்நாட்டில் உணவு உற்பத்தியை பெருக்க ரூ.115 கோடி நிதி ஒதுக்கீடு வேளாண்மை துறை முதன்மை செயலாளர் தகவல்**



காஞ்சீபுரம்,

தமிழ்நாட்டில் உணவு உற்பத்தியை பெருக்குவதற்காக ரூ.115 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளதாக வேளாண்மை துறை முதன்மை செயலாளர் சந்தீப் சக்சேனா தெரிவித்தார்.

<u>கலந்தாய்வு கூட்டம்</u>

காஞ்சீபுரம், திருவள்ளூர் மாவட்ட வேளாண்மை துறை அதிகாரிகளுக்கான கலந்தாய்வுக்கூட்டம் காஞ்சீபுரத்தில் நடந்தது. இதில் சிறப்பு விருந்தினராக தமிழக வேளாண்மை துறை அமைச்சர் தாமோதரன் கலந்து கொண்டார்.

கூட்டத்தில் கலந்து கொண்ட விவசாயிகள், 100 நாள் வேலைத்திட்ட பயனாளிகளை விவசாயத்துக்கு பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏரி, குளம், குட்டைகளை தூர்வாரி நீர் ஆதாரங்களை பெருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்தனர்.

அதைதொடர்ந்து வேளாண்மை துறை முதன்மைச்செயலாளர் சந்தீப் சக்சேனா, பேசியதாவது:–

<u>பசுமை புரட்சி</u>

2–ம் பசுமை புரட்சியை ஏற்படுத்தும் வகையில் தமிழக முதல்–அமைச்சர் ஜெயலலிதா திட்டமிட்டு உள்ளார். 2015–16ம் ஆண்டுகளில் தமிழகத்தில் வேளாண் உற்பத்தியை 2 மடங்கு உயர்த்துவது என்றும், விவசாயிகளுக்கு 3 மடங்கு வருமானம் அதிகரிக்க வேண்டும் என்றும் இலக்கு நிர்ணயித்து உள்ளார்.

இந்த இலக்கை எட்டுவதற்கு சவாலாக இருப்பது தரிசு நிலங்கள்தான். காஞ்சீபுரம் மாவட்டத்தில் கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் 33,670 ஹெக்டேர் நிலங்கள் விவசாயம் செய்யப்படாமல் தரிசாக போடப்பட்டு உள்ளது. இது திருவள்ளூர் மாவட்டத்தில் 34,800 ஹெக்டேர் என்ற அளவில் உள்ளது.

<u>இலக்கு நிர்ணயம்</u>

காஞ்சீபுரம் மாவட்டத்தில் 1,21,300 ஹெக்டேர் நிலத்தில் நெல் சாகுபடி செய்ய வேண்டும் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. ஆனால் வெறும் 26,700 ஹெக்டேர் நிலத்தில் மட்டுமே நெல் சாகுபடி செய்யும் நிலை உள்ளது.

திருவள்ளூர் மாவட்டத்துக்கு 84,000 ஹெக்டேர் நிலத்தில் நெல் சாகுபடி செய்ய வேண்டும் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டு அதில் 43,000 ஹெக்டேர் நெல் சாகுபடி என்ற அளவை எட்டி உள்ளது.

<u>ரூ.115 கோடி ஒதுக்கீடு</u>

மக்கள் தொகை 7 சதவீதம் என்றால் உணவு உற்பத்தி 4 சதவீதம்தான் உள்ளது. உணவு உற்பத்தியை பெருக்கும் வகையில் உணவு தானிய இயக்கம் தொடங்கப்பட்டு உள்ளது. மக்கள் பெருக்கத்துக்கு ஏற்ப உணவு உற்பத்தியை பெருக்க ரூ.115 கோடி நிதியை அரசு ஒதுக்கீடு செய்து உள்ளது.

2–வது பசுமை புரட்சியாக 2 மடங்கு உணவு உற்பத்தியை பெருக்குவதற்கும், விவசாயிகள் லாபம் அடைவதற்கும் இந்த திட்டத்தை கிராமங்களிலும் செயல்படுத்த வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

கூட்டத்தில் காஞ்சீபுரம் மாவட்ட கலெக்டர் லி.சித்ரசேனன், எம்.எல்.ஏ.க்கள் வி.சோமசுந்தரம், வாலாஜாபாத் பா.கணேசன், மொளச்சூர் இரா.பெருமாள், எஸ்.கணிதா சம்பத், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் காஞ்சி பன்னீர்செல்வம், மாவட்ட வேளாண்மை துறை இணை இயக்குனர் சவுந்தரராஜன், திருவள்ளூர் மாவட்ட வேளாண்மை துறை துணை இயக்குனர் சுந்தர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**குன்னூர், விவசாயிகள் மற்றும் சுய உதவி குழுக்கள் ரூ. 25 லட்சம் மானியம்**



குன்னூர்,

தேயிலை விவசாயிகள் மற்றும் சுய உதவி குழுக் கள் சிறு தேயிலைதொழிற் சாலைகளை நிறுவ ரூ. 25 லட்சம் மானியம் வழங் கப்படுவதாக தேயிலை வாரிய உதவி தலைவர் கோஷி பேபி தெரிவித்து உள்ளார்.

தேயிலை வாரியம்

சிறு தேயிலை விவசாயிக ளுக்கு தேயிலை வாரியம் பல் வேறு மானிய திட்டங்களை அறிவித்து வருகிறது. இதன்படி கவாத்து, மறு நடவு போன்ற வற்றிற்கு நிதியுதவி அளிக் கப்படுகிறது. தற்போது சிறு தேயிலை விவசாயிகளும், சுய உதவி குழுக்களும் சிறுதேயிலை தொழிற்சாலைகளை நிறுவ தேயிலை வாரியத்தால் புதிய திட்டம் அறிவிக்கப்பட்டு உள் ளது.

இதுகுறித்து தேயிலைவாரிய உதவி தலைவர் கோஷி பேபி, தேயிலை வாரிய உறுப்பினர் டாக்டர் ராமு ஆகியோர் வெளியிட்டு உள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்ப தாவது:-

சிறு தேயிலை தொழிற்சாலைகள்

இந்தியாவில் உள்ள 2 லட் சம் சிறு தேயிலை விவசாயிகள் பயன் அடையும் வகையில் தேயிலை வாரியத்தின் மூலம் புதிய திட்டம் நடைமுறைக்கு வர உள்ளது. இதன்படி சிறு தேயிலை விவசாயிகளும், சுய உதவி குழுக்களும் எளிதாக சிறு தேயிலை தொழிற்சாலை களை நிறுவி அதனை நடத்தி வர முடியும்.

புதியதாக சிறு தேயிலை தொழிற் சாலைகளை கட்டு வதற்கும், எந்திரங்கள் வாங்கு வதற்கும் ஆகும் மொத்த செலவினத்தில் 40 சதவீதம் தேயிலை வாரியத்தின் மூலம் மானியமாக வழங்கப்படும். அதாவது 25 லட்சம் ரூபாய் மானியமாக கிடைக்கும். மீதி தேவைப்படும் சுமார் 30 லட்ச ரூபாய் வங்கிகள் உத்தரவாதம் இல்லாமல் கடன் வழங்க முன்வந்து உள்ளன.

முதலீடு திரும்ப பெறலாம்

இதன் மூலம் 3 ஆண்டுகளில் விவசாயிகள் செய்யும் முதலீடு திரும்ப பெற முடியும். மேலும், புதிய சிறு தேயிலை தொழிற் சாலைகள் தேயிலை மார்க் கெட்டிங்

கன்ட்ரோல் விதியில் இருந்து விலக்கு அளிக்கப் படுகிறது. எனவே, நீலகிரியில் உள்ள சிறு விவசாயிகளும், தேயிலை சிறு விவசாயிகள் சங்கங்களும் இந்த சலுகை களை பயன்படுத்திக் கொள்ளு மாறு கேட்டுக் கொள்கி றோம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

**ஈரோட்டில் மல்லிகைப்பூ விலை உயர்ந்தது ஒரு கிலோ ரூ.500–க்கு விற்பனை**



ஈரோடு,

ஈரோட்டில் மல்லிகைப்பூ விலை உயர்ந்து ஒரு கிலோ ரூ.500–க்கு விற்பனையானது.

<u>பூ விலை உயர்வு</u>

ஈரோடு பஸ்நிலையம் பகுதியில் ஏராளமான பூ கமிஷன் மண்டிகள் உள்ளன. இந்த மண்டிகளுக்கு சத்தியமங்கலம், அந்தியூர், பருவாச்சி, திண்டுக்கல், சேலம், கோவை, நிலக்கோட்டை என பல பகுதிகளில் இருந்தும் பூக்கள் விற்பனைக்கு வருகின்றன. நேற்று ஈரோடு பூ கமிஷன் மண்டிகளில் பூக்கள் விலை உயர்ந்து விற்கப்பட்டன.

ஒரு கிலோ மல்லிகைப்பூ ரூ.500–க்கு விற்பனையானது. ஒரு கிலோ முல்லைப்பூ ரூ.400–க்கும், ஜாதி மல்லி கிலோ ரூ.280–க்கும், காட்டுமல்லி கிலோ ரூ.360–க்கும் விற்பனையானது. கனகாம்பரம் பூ ஒரு கிலோ ரூ.320–க்கும் விற்கப்பட்டது. இதுதவிர அரளி, பட்டு, கலர் போன்ற பூக்களும் வழக்கத்தைவிட விலை உயர்வாக இருந்தது.

<u>ஆயுதபூஜை</u>

ஆயுத பூஜைக்கு தேவைப்படும் செவ்வந்தி பூ நேற்று கிலோ ஒன்று ரூ.200 முதல் ரூ.240 வரை விற்பனையானது.

இதுபற்றி பூ கமிஷன் மண்டி உரிமையாளர் நாகராஜன் கூறியதாவது:–

ஈரோடு மார்க்கெட்டுக்கு பூ கொள்முதல் செய்யும் பகுதிகளில் கடுமையான வறட்சி நிலவி உள்ளது. இதனால் பூச்செடிகள் குறைந்த அளவே பூக்கின்றன. குறிப்பாக மல்லிகைப்பூ சீசன் முடிந்து வரத்து குறைந்து விட்டது. கடந்த ஒரு மாதத்துக்கு முன்பு மல்லிகைப்பூ ஒரு கிலோ ரூ.40 முதல் ரூ.60–க்கு விற்பனையானது அது தற்போது ரூ.500 ஆக விலை உயர்ந்து உள்ளது. ஆயுதபூஜையையொட்டி இன்னும் பூக்கள் விலை உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. நேற்று முன்தினம்வரை ரூ.80–க்கு விற்ற செவ்வந்தி ஒரே நாளில் ரூ.240 ஆக உயர்ந்து உள்ளது. இது இன்னும் உயர வாய்ப்பு உள்ளது.

இவ்வாறு நாகராஜன் கூறினார்.

**திருமானூர்-கொள்ளிடம் ஆற்றில் தடுப்பணை விவசாய தொழிலாளர் சங்க கூட்டத்தில் தீர்மானம்**



திருமானூர்,

திருமா னூர்- கொள்ளி டம் ஆற்றில் தடுப்பணை கட்ட வேண்டும் என்று விவசாய தொழிலாளர் சங்க பேரவைக் கூட் டத்தில் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

<u>பேரவைக் கூட்டம்</u>

திருமானூர் பயணியர் மாளிகையில் அகில இந்திய விவசாய தொழிலாளர்கள் சங்க 5-வது ஒன்றிய பேரவை கூட்டம் நடைபெற்றது. கூட் டத்திற்கு சாமிதுரை தலைமை தாங்கினார். சந்திரகாசன் வர வேற்றார். சிவகுரு, முன்னிலை வகித்தார்.

சங்கத்தின் மாவட்ட தலைவர், ஒன்றிய செயலாளர் பால சுப்பிரமணியன், விவ சாய சங்க ஒன்றிய செயலாளர் வரப்பிரசாதம், கரும்பு விவசாய சங்க தலைவர் வைத்தி லிங்கம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

சங்கத்தின் மாவட்ட செயலாளர் இளங்கோவன், சங்க செயல்பாடுகள் பற்றி சிறப்புரை ஆற்றினார்.

<u>தீர்மானங்கள்</u>

கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

100 நாள் வேலை திட்டத்தில் கிராம விவசாய தொழிலா ளர்களுக்கு 1 ஆண்டுக்கு 200 நாள் வேலை வழங்க வேண்டும் 100 நாள் வேலை திட்டத்தில் கூலி வழங்குவதில் உள்ள குளறுபடியை நீக்கி முறையாக கூலி வழங்க வேண்டும். 100 நாள் வேலை திட்டத்தில் வேலை செய்யும் தொழிலா ளர்களுக்கு அரசு அறிவித்த ஜீரோ வங்கி கணக்கிற்கு ரூ.ஆயிரம், 2 ஆயிரம் என கணக்கு துவக்க வங்கி பெறுவதை கண்டிப்பது.

<u>வீட்டுமனைப் பட்டா</u>

முதியோர் உதவித் தொகையை நிலுவையில் வைத்து கொடுக்காமல் இருப் பதை கண்டிப்பது. திருமானூர் பகுதியில் வீடு இல்லாதவர்க ளுக்கும், வீட்டுமனை இல்லா தவர் களுக்கும் குடிமனை மற்றும் பட்டா வழங்க வேண் டும். கரைவெட்டி பறவைகள் சரணாலயம் சிறந்த சுற்றுலா தலமாக தரம் உயர்த்த வேண்டும். குந்தபுரம், கள்ளூர் சாலையை மாற்றி இடையில் உள்ள ஓடை பாலத்தை கட்டித்தர வேண்டும்.

<u>தடுப்பணை</u>

திருமானூர் கொள்ளிடம் ஆற்றில் தடுப்பணை கட்டித்தர வேண்டும். தனியார் சர்க்கரை ஆலையில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு பாது காப்பு கருவிகள் வழங்கி உயிர் காப்பீடு திட்டம் வழங்க வேண்டும் மேற்கண்ட தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் கணேசன், சத்திய மூர்த்தி, தெய்வராஜ் சங்கத்தின் திருமானூர் ஒன்றிய தலைவர் சாமிதுரை, செயலாளர் சுப்பிரமணியன், ஆரோக்கிய நாதன், ஜம்புலிங்கம், சிவக் கொழுந்து, செந்தில், பழனி சாமி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**கடலூர் அருகே இலவச கால்நடை மருத்துவ முகாம்**

கடலூர்,

கடலூர் அருகே ராமாபுரம் ஊராட்சி கிழக்கு ராமாபுரத்தில் இலவச கால்நடை மருத்துவ முகாம் நடந்தது. முகாமுக்கு கூத்தப்பாக்கம் ரோட்டரி சங்க தலைவர் சக்திவேல் தலைமை தாங்கினார். ஊராட்சி மன்ற தலைவர் தரணீதரன் முன்னிலை வகித்தார். முகாமை கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குனர் டாக்டர் மதிவாணன் தொடங்கி வைத்து, கால்நடைகள் பராமரிப்பு தொடர்பான ஆலோசனைகளை வழங்கினார். முகாமில் ஊராட்சிக்குட்பட்ட 600–க்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. இதில் உதவி கால்நடை இயக்குனர்கள் கணேசன், ராமமூர்த்தி, கால்நடை மருத்துவர் மோகன், கால்நடை ஆய்வாளர் ராஜமச்சேந்திர சோழன், மற்றும் சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர். முடிவில் சங்க செயலாளர் முருகேசன் நன்றி கூறினார்.